


April 2021 Issue 4 Editor ; VM Thevarajan

## தந்சார்புப் பொருளாதாரம்

வீட்டில் மாடு நின்றது. ஆடு நின்றது. கோழி நின்றது. மாட்டின் பாலை விற்ற பணம் எங்கள் உணவுக்கும் மாட்டின் உணவுக்கும் உதவியது. மாட்டின் எருவை போட்டு வயல் செய்தோம். உரம் தேவைப்படவில்லை. கலப்பையால் உழுதோம். எரிபொருள் பற்றிய கவலை இல்லை. திருக்கல் வண்டியில் பயணம் செய்தோம், வாகனங்களின் புகையால் சுகாதாரச் சீர்கேடுகளில்லை. ஈருருளி நெரிசலால் விபத்துக்களில்லை. கோழியின் முட்டையை கொடுத்து அயல் வீட்டு நாவிதரிடம் முடி வெட்டினேன். வயலில் விளைந்த மரக்கறிகளை கோயில் குருக்களுக்கு கொடுத்து தாத்தா பாட்டியின் திவசங்கள் வருடம் தோறும் செய்தோம். பணம் தேவைப்படவில்லை. சந்தையில் கீரையை விற்று மீனை வாங்கினோம். இதுவே பணப் பண்டமாற்று.

வீட்டு வளவில் தென்னைகள் நின்றன. தென்னையால் விழுந்த தென்னோலை எடுத்து சகோதரர்களாய் கிடுகுகள் இழைத்தோம். கிடுகு விற்ற காசில் உடுப்பு வாங்கினோம். தேங்காயை விற்று தேவைகளை நிறைவேற்றிக் கொண்டோம்.

கைகளில் கைபேசிகள் இல்லை. கைநிறைய வேலையிருந்தது. அலாரம் வைத்து எழும்பியதில்லை. சேவலின் கூவலுக்கும் கோயில் மணியோசைக்கும் துயில் கலைந்தோம். அயலூரிலுள்ள அன்னப்பிள்ளையும், சின்னாச்சியும் அம்மம்மா, அம்மாவிடம் வந்து தங்கள் உறவுகளின் விசேசங்களுக்கு தங்க காப்பும் சங்கிலியும் இரவல் வாங்கிப் போட்டு திரும்பவும் நாணயமாக தந்தார்கள். மனிதர்களில் நம்பிக்கையிருந்தது. பவுணைக் கூட கொடுத்து வாங்கிய பொற்காலமது.

வீட்டு வளவுகள் எங்கும் நீட்டுக்கு பனைமரங்கள் நின்றன. பக்கத்தூர் சரவணனும் கந்தனும் பதநீர் இறக்க வருவார்கள். வருமானத்துக்காக பனை கொடுத்ததற்காக வயலின் மண்ணைப் பதப்படுத்தி பாத்தி கட்டித் தருவார்கள். நேரம் காலம் பாராமல் நேர்மையோடு வேலை செய்தார்கள். பணத்தை விடவும் மனித மனங்களை மதித்தார்கள். எல்லோரிடமும் தேவைக்கு அதிகமாக பணமிருந்ததில்லை. தேவைகளுக்கு மட்டும் பணமிருந்தது.

உடற் பயிற்சிக் கூடங்கள் ஊர்களில் இருந்ததில்லை. உலக்கை, உரல் வீடுகளில் இருந்தது. ஆட்டுக்கல், அம்மிக்கல்லு அடுக்களையில் இருந்தது. உடம்பும் உடும்பாயிருந்தது. அக்கா தங்கச்சிமாருக்கு அழகான இடையிருந்தது. இடையின் இடை வெளியில் தண்ணீர் குடமிருந்தது. தவழும் குழந்தை இருந்தது. ஊருக்கொரு வைத்தியசாலை இருந்ததில்லை. யாருக்கும் வைத்தியம் தேவைப்பட்டதில்லை. உடல் ஆரோக்கியமாயிருந்தது. உடல் மட்டுமல்ல உறவுகளும் ஆரோக்கியமாயிருந்தது.

## இறைவனின் சமத்துவம்

ஒரு நாள் காசி விஸ்வநாதர் வறியவன் வேடம் பூண்டு காசியில் நகர் வலம் வந்தார். செல்வந்தர் வசிக்கும் பகுதியில் பசிக்கு உணவு கேட்டார். எல்லாக் கதவுகளும் மூடப்பட்டன. பின் நடுத்தர மக்கள் வாழும் இடங்களில் வீடு வீடாக ஏறி இறங்கினார். எவரும் பிச்சை போடவில்லை. மாலை 7 மணி ஆகிவிட்டது. உணவு கிடைக்கவில்லை. பசியோடு காசியின் கழிவு நீர் கங்கையில் கலக்கும் இடத்துக்கு வந்தார். அங்கே தனியாக ஒரு தொழு நோயாளி அமர்ந்திருப்பதைக் கண்டார். அவரைச் சுற்றி நான்கு நாய்கள். காலை முதல் மாலை வரை எடுக்கும் பிச்சையை இங்கே கொண்டு வந்து ஐந்து பங்காக பிரிப்பார். முதல் 4 பங்கு உணவுகளை 4 நாய்களுக்கும் மிச்சமுள்ள ஒரு பங்கை இவரும் சாப்பிடுவார். அங்கு வந்த இறைவன் அவரிடம் சென்று எனக்கு பசிக்கிறது என்று கையை நீட்டினார். தொழு நோயாளி அவர் வாடிய முகத்தைக் கண்டு தன் பங்கு உணவை அவருக்கு நீட்டினார். இறைவன் அதிர்ந்து விட்டார். நான் யார் தெரியுமா என்று தொழுநோயாளியிடம் கேட்டார். யாராக இருந்தால் என்ன முதலில் சாப்பிடு என்றான். மீண்டும் இறைவன் அதட்டலாக கேட்டார், நான் யார் தெரியுமா? தொழுநோயாளி அமைதியாகச் சொன்னார்…..இறைவன் வாயடைத்துப் போய் விட்டார். "இந்தத் தொழுநோயாளியின் அசுத்தமான உணவை என் அழுகிப் போன கைகளால் கொடுப்பதைப் பெற்றுக் கொள்வதென்றால் அது (தொடர்ச்சி 2ம் பக்கம்)

(1ம் பக்கத் தொடர்ச்சி)
காசி விஸ்வநாதரைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்.” என்று சொல்லிச் சிரித்தார். எல்லா உயிருள்ளும் உயிராக இருக்கும் இறைவனுக்கு எந்த உயிர்களுக்குள்ளும் வேறுபாடு பார்க்கத் தெரியாது. என்பதை அவர் தெளிவாக உணர்ந்து, அழகாகச் சொன்னார். இறைவன் மெய் மறந்து நின்றுவிட்டார்.

## எத்தனை முறை செத்து விட்டேன் ?

பலர் இறக்கிறார்கள் சிலர் மரிக்கிறார்கள். சிலர் மடிகிறார்கள். பலர் செத்து போகிறார்கள், சிலர் மரணிக்கிறார்கள், ஒரு சிலர் மட்டுமே காலமாகிறார்கள். அவர் இறந்து விட்டார், அடக்கம் செய்யணும்... சொல்லிக் கொண்டே சென்றார்கள்..!! மெல்ல எட்டிப் பார்த்தேன். மூச்சு இல்லை – ஆனால் இப்போதுதான் இறந்திருந்தார் என்பதை மட்டும் நம்ப முடியவில்லை..!! இருபது வருடங்கள் முன்னாடி – அவர் மனைவி இறந்த பிறகு – சாப்பிட்டாயா..!! என்று யாரும் கேட்காத நேரத்தில் – அவர் மரித்திருந்தார் ... யாருமே கவனிக்க வில்லை...!!

பொண்டாட்டி போனதுமே போய்த் தொலைய வேண்டியதுதானே – என்று காதுபட மருமகள் பேசியபோது அவர் இறந்திருந்தார் அப்போதும் யாருமே கவனிக்க வில்லை...!!

தாய்க்குப் பின் தாரம் தாரத்துக்குப் பின் ..வீட்டின் ஓரம் ...!!! என்று வாழ்ந்த போது – அவர் புதைந்து போனார் யாருமே கவனிக்க வில்லை ..!!!

“காசு இங்கே மரத்திலேயா காய்க்குது” - என்று மகன் அமிலவார்த்தையை வீசிய போது..!!! அவர் செத்து போனார் யாருமே கவனிக்க வில்லை...!!

என்னனுங்க...!!! “ரொம்ப தூரத்திலே இருக்குற முதியோர் இல்லத்திலே விட்டு தலை முழுகிட்டு வந்திடுங்க...!!!” என்று காதிலே விழுந்த போதும் அவர் மடிந்து போனார். யாருமே கவனிக்க வில்லை...!!!

”உனக்கென்னப்பா...!!! பொண்டாட்டி தொல்லை இல்லை” என்று வாழ்த்துவது போல கிண்டலடிக்கப் பட்ட போது அவர் மரித்திருந்தார் ..!!! அப்போதும் யாருமே கவனிக்க வில்லை. இப்போதுதான் இறந்தாராம் என்கிறார்கள்..!!! எப்படி நான் நம்புவது..??? நீங்கள் செல்லும் வழியில் இப்படி யாராவது இறந்து கொண்டிருப்பார்கள்... ஒரு வினாடியாவது நின்று பேசி விட்டுச் செல்லுங்கள்..!!!

இல்லையேல்...!!!! உங்கள் அருகிலேயே இறந்து கொண்டிருப்பார்கள். புரிந்து கொள்ளுங்கள் வாழ்க்கை என்பது வாழ்வது மட்டுமல்ல..!!! வாழ வைப்பதும்தான் ..!!!! வயதானவர்களிடமும் கொஞ்சம் பேசுங்கள்... அதிலும் துணை இல்லாமல் தனியாக இருப்பவரிடம் மனம் விட்டு பேசுங்கள்....

*ஒரு சிலரே காலமாகிறார்கள் * அவர்கள் வாழ்ந்த பயனை அடைந்து மகிழ்ந்து மரணத்தை கூட மனதார ஏற்று குடும்பம் சூழ உயிர் பிரிந்து உரிய மரியாதையை பெற்று மறைந்தும் வாழ்வார்கள் அவர்களே காலமாகிறார்கள். *பலர் இறந்து விடுகிறார்கள்*

*புதைக்க தான் சில ஆண்டுகள் ஆகிறது. ஏனடா பிறந்தோம் வளர்ந்தோம் வாழ்ந்தோம் மணம் முடித்தோம் பிள்ளைகளை பெற்றோம் என்று அணு அணுவாக வருந்தி ஒரு நேர உணவுக்கே கை ஏந்தி கவலைப்பட்டு தினமும் மனம் உருகி இறந்து கொண்டு இருப்பார்கள். அவர்கள் உடலை ஒரு நாள் புதைக்கவோ எரிக்கவோ ஒரு நாள் தேவைப்படுகிறது. அத்துடன் உடல் உருவம் யாவும் அழிந்து போகிறது. நினைக்க கூட யாரும் இருக்க மாட்டார்கள் அவர்களே இறந்து போகிறார்கள். 🙏

## Beautiful Explanation of ‘Association’ by Swamy Vivekananda

Explaining the meaning of ‘Association’ he said “A rain drop from the sky; if it is caught by clean hands, is pure enough for drinking. If it falls in the gutter, its value drops so much that it can’t be used even for washing your feet. If it falls on a hot surface, it will evaporate. If it falls on a lotus leaf, it shines like a pearl. The drop is the same, but its existance and worth depends on whom it is associated with…” Always be associated with people who are good at heart.. You will experience your own inner transformation.

## வணக்கத்துக்குரிய பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் மிக அழகான அர்த்தமுள்ள செய்தி

ஆறுகள் தங்கள் நீரைக் குடிப்பதில்லை, மரங்கள் தங்களது கனிகளை உண்பதில்லை, சூரியன் தனக்காக ஒளி வீசுவதில்லை, மலர்கள் தங்களுக்காக மணம் பரப்புவதில்லை, பிறருக்காக வாழ்வதுதான் இயற்கையின் நியதி.

நாம் அனைவரும் ஒருவர் மற்றவருக்கு உதவுவதற்காகவே பிறந்திருக்கின்றோம் இது கடினமான ஒன்றா? இது எப்படி கடினமாகும்? நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கும்போது உங்கள் வாழ்க்கை நன்றாக இருக்கும். உங்களால் பிறர் மகிழ்ச்சியடையும் போது தான் உங்கள் வாழ்வு சிறப்பானதாக அமையும். நாம் ஒன்றை நினைவிற் கொள்வோம். ஒவ்வொரு தாவர இலைக்கும் மாறுபடும் அதன் நிற வேறுபாடுதான் அழகு. மனித வாழ்வில் மாறுபடும் ஒவ்வொரு சூழலும் தான் நம் வாழ்க்கைக்கு அழகு. இரண்டிற்கும் மிகத் தெளிவான தொலை நோக்கு அவசியம் எனவே…

முணு முணுக்க வேண்டாம் ! முறையிட வேண்டாம் ! வலிகள் தான் நாம் உயிரோடு இருக்கின்றோம் என்பதன் அடையாளம். பிரச்சனைகள் தான் நாம் வலிமையானவர்கள் என்பதன் அடையாளம். இறை பிரார்த்தனை தான் நாம் தனிமையில் இல்லை என்பதன் அடையாளம். இவற்றையெல்லாம் மனதில் இருத்துவோம்…. இந்த உண்மைகளை, ஒழுங்குகளை ஏற்க முடிந்தால்தான் நமது மனம், நமது உள்ளம் மற்றும் வாழ்வு மிகவும் அர்த்தமுள்ளதாக….. மிகவும் மாறுபட்டதாக… மிகவும் மேன்மையானதாக இருக்கும்.

நெருக்கடியான இக் காலகட்டத்தில் இந்த நாள் உங்களுக்கு ஆசீர்வாதமான நாளாக அமைய இறைபணிந்து வாழ்த்துகிறேன்….

## மூத்த பிரசைகள்

- நீங்கள் முதியவராகும் போது நிச்சயமாக உங்களுக்கு சரியென்று பட்டாலும் மற்றவர் கேட்டாலல்லாது எதனையும் எவருக்கும் சொல்லிக் கொடுக்க முனையாதீர்கள். .
- கேளாமலே எவருக்கும் உதவ முற்படாதீர். ஆனால் இயலுமானால் உதவ தயாராயிருங்கள்.
- யாரும் கேளாமலே உங்கள் அபிப்பிராயங்களை எல்லா நேரமும் தெரிவிக்காதீர்.
- உங்கள் கருத்தை, அது சிறந்ததென நினைத்தாலும் ஒவ்வொருவரும் அதனைப் பின்பற்ற வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள். .
- மற்றவர்கள் விடயத்தில் நீங்களே உங்களை திணிக்காதீர்கள்.
- உங்கள் பிள்ளைகளிடம் நன்றியை எதிர்பார்க்காதீர்கள்.
- நன்றி கெட்ட பிள்ளைகள் என்று எவருமில்லை. பிள்ளைகளிடம் நன்றியை எதிர்பார்க்கும் மூடப் பெற்றோர் மட்டுமே உள்ளார்கள்.
- முதுமைக்கு எதிராக போராடும் சிகிச்சைகளில் சேமித்த பணத்தை விரயமாக்காதீர்கள். அந்த பணத்தை ஒரு சுற்றுலாவுக்காக செலவிடுங்கள். அது எப்போதும் பெறுமதியானது.
- உங்கள் கணவனை / மனைவியை வயது முதிர்ந்து தோல்கள் சுருங்கி அலங்கோலமாக இருந்தாலும் அவரை நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள். அவர் இளமையில் எவ்வளவு அழகாக, துடிப்பானவராக இருந்தார் என்பதை எண்ணிப்பாருங்கள். இப்போது முதுமையால் வந்த இயலாமை காரணமாக ஒவ்வொன்றுக்கும் உங்களையே எதிர்பார்க்கின்றார்.
- புதிய தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளுங்கள். உலகச் செய்திகளை தினமும் அவதானியுங்கள். எப்போதும் புதிதாக ஒன்றைக் கற்றுக் கொள்ளுங்கள். ஒரு புதிய சமையல் முறை, ஒரு புதிய உள்ளக விளையாட்டு என்று காலத்தோடு ஒன்றி பின் தங்காது வாழப் பழகிக் கொள்ளுங்கள்.
- உங்களுக்கோ அல்லது உங்கள் பிள்ளைகளுக்கோ என்ன நேர்ந்தாலும் அது உங்களால் தான் நேர்ந்ததென்று எண்ணி வருந்தாமல் உங்களால் முடிந்தவற்றை செய்து விட்டீர்கள் என்ற திருப்தியுடன் இருங்கள்.
- எந்தச் சந்தர்ப்பத்திலும் உங்கள் நேர்மையையும் கண்ணியத்தையும் தவற விடாதீர்கள்.
- மூத்தோரே! நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் இன்னும் உயிரோடு தான் இருக்கின்றீர்கள். இயன்றவரை நல்லதையே செய்யுங்கள். பலனை இறைவனுக்கு விட்டு விடுங்கள்.

# பட படப்பு

ஒரு பெண் வைத்தியரிடம் வந்து காத்திருந்தார்.. அவருக்கான நேரம் வர வைத்தியர் அழைத்தார். பெண்ணும் வைத்தியரின் அறைக்குள் நுழைந்தார்.

வைத்தியர் பெண்ணிடம் "என்ன அம்மா வருத்தம் சொல்லுங்க" என்றார். அந்தப் பெண் வருத்தத்தை சொல்ல தொடங்கினார். வானொலி செய்தி போல பெண் சொல்லிக் கொண்டே இருந்தார்.

தலை வாரும்போது.... சிக்குப் படுகிறது. முள்ளந்தண்டு எலும்புகள் தனி தனியாக களருவது போல் இருக்கு. கால் கை பயங்கர நோ. வலிக்கிறது. நெஞ்சுக்கை குத்துகிறது. தலை வெடிக்கும் போல் உள்ளது. அடிக்கடி சிறுநீர் வருகிறது. பசி இல்லை. கண் மங்கலாக இருக்கிறது.

சரி இவ்வளவு தானா? அது சரி உங்களுடன் கூட வந்தது யார், அவரை வரச் சொல்லுங்கள்!
என்னுடன் கூட வந்தது ஆட்டோக்காரர் மட்டும் தான்!
ஏன் அம்மா உங்கள் வீட்டுக்காரர் எங்கே? இதற்குக் கூட அவர் கூடி வரமாட்டாரா?

அந்தாள் வேலை வேலை, பணம் பணம். வேலை முடிய களை களை பின்பு அதை போக்க நித்திரை.
பிள்ளைகள் எங்கே அம்மா?
அதுகள் மொபைல், கணனி, படிப்பு. சமையல் செய்து வைக்க உணவு. உணவு முடிய அவரவர் பாட்டில் ஏதோ செய்வார்கள்.
"சரி அம்மா உங்களுக்கு எந்த வருத்தமும் இல்லை. உங்களுக்கு வந்திருப்பது மனக்களைப்பு. "இதற்கு மருந்து மனம் விட்டுப் பேசவேண்டும்". நீங்கள் பேசுவதை கணவன், பிள்ளைகள் காது கொடுத்து கேட்க வேண்டும். இப்பவடி ஒரு வாரம் தொடர்ந்தால் எல்லாம் சரியாகிவிடும்.

ஆம், உண்மையில் பலருக்கு உடலில் நோய் இருப்பதில்லை. நோய் இருப்பது போல் காட்டிக் கொள்ளும் காரணம் கணவன் பிள்ளைகள் வெளியே சென்று விட வீட்டில் உள்ள வேலைகள் சமையல் சாப்பாடு என அனைத்தையும் இழுத்துப் போட்டு செய்யும் அந்த பெண்ணுக்கு ஆறுதல் எதுவும் இருப்பதில்லை. அவருடன் மனம் விட்டு கணவன் பேசினாலே மனதில் எந்த கவலையும் வராது. எல்லோரும் தாங்கள் தங்கள் பாடு என்று இருந்தால் வீட்டில் இருக்கும் பெண்களுக்கு இப்படி இல்லாத வருத்தம் எல்லாம் வந்தே தீரும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வீட்டில் உள்ளவர்கள் நோய்வாய் படுவதற்கு சூழ உள்ள உறவுகளே காரணமாகிறோம்! எல்லோரும் மனம் விட்டுப் பேசினால் நோய் இல்லாத வாழ்க்கை வாழலாம். அதற்காக கொறோனா கூட அண்டாதோ என்று கேட்டு விட வேண்டாம். கொறோனாவையும் கடந்து விடலாம், உரிய நடை முறைகளை கடைப் பிடிப்பதன் மூலம்.

"உளம் வளர்த்து நலம் காப்போம்."

# தனிமை

இந்த உலகத்துல உன்னை விட்டுப் போகாமல் எப்பவுமே உன் கூடவே இருக்கிற உறவு என்று சொன்னால் அது தனிமை மட்டும் தான். அந்த தனிமையை விட்டுவிட்டு நீ யார் கூடவும் வேணுமென்றால் போகலாம். ஆனால் அது உன்னைத் தேடி வராது. ஒரு வேளை நீ சேர்ந்து போனவங்க உன்னை பாதியில் விட்டு விட்டு போனால் திரும்பி வந்தாலும் தனிமை உன்னை ஏற்றுக் கொள்ளும். அது உன்னை வெறுக்காது. நீ குழம்பிப் போயிருக்கும்போது மட்டும் தான் தனிமை உனக்கு அழுத்தம் கொடுக்கும். நீ தெளிவாக இருந்து பார், தனிமையை போல் யாராலும் உனக்கு அமைதியை கொடுக்க முடியாது. எவ்வளவு பேர் சுற்றி இருந்தாலும். வாழ்க்கையில் கட்டாயமாக எல்லோருக்கும் ஒரு நேரத்தில் தனிமை அவசியம். ஏனென்றால் எல்லோரும் இங்கே தனி தனி மனிதர்கள்.

நான் யாரென்று தன்னிடம் கேள்வி கேட்பவன் தனிமையோடு பேசுவான். சராசரி உலக வாழ்க்கையை வெறுப்பவன் தனிமையை நேசிப்பான். தனிமையை விட இந்த உலகத்தில் எதுவுமே சிறந்தது இல்லை என்று நினைப்பவர்கள் துறவி ஆகிறார்கள். கடந்து வந்த வாழ்க்கையில் நடந்த அழகான நிகழ்வுகளை மீட்டிப் பார்ப்பதற்கு தனிமை ஒரு தருணத்தைத் தரும். ஆனால் அதே தனிமையோடு துயர சம்பவங்களை நினைத்துப் பார்த்தால் அழ வைத்துவிடும். இருந்தாலும் கவலையை மறைப்பதற்கு மற்றவர் முன் சிரிப்பவர்கள் எல்லோரும் கட்டாயம் அழுவதற்கு தனிமையோடு தேடி செல்வார்கள். சிலர் பேசும் போது கூட சொல்லுவார்கள் என்னைத் தனியாய் விடுங்கோ. நான் நிம்மதியா இருக்கவேணும் என்று.

தனிமை சில பேருக்கு வாழ்க்கையாகவே இருக்கிறது. நினைப்பதைச் செய்யலாம். ஏனென்றால் அதை குறை சொல்ல யாரும் இருக்க மாட்டார்கள். விரும்பியதையெல்லாம் பார்க்கலாம் என்றால் அதை மற்றவர்கள் பார்க்க மாட்டார்கள். அதேபோல் தற்கொலை செய்ய முயன்றால் கூட தடுக்க யாரும் வர மாட்டார்கள். சிந்தனையாளனை தனிமை வளப்படுத்தும். ஆனால் மன அழுத்தத்தில் இருப்பவனை தனிமை நோயாளி ஆக்கி விடும். தனிமை சுதந்திரம் கொடுக்கும். ஆனால் தனிமையோடு வாழ்க்கை முழுக்க வாழ்ந்து விட முடியாது.

தவறவிட்ட உறவுகளை அவமதித்த தேசங்களை, தூக்கி எறிந்த இதயங்களை மன்னிப்புக் கேளுங்கள். ஏற்றுக் கொள்ளுங்கள். தனிமையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் மனம் திரும்புங்கள். அல்லது மறுவாழ்வு தேடுங்கள். இந்த பூமியில் இருந்ததற்கு எந்த அடையாளமும் வைக்காமல் கடைசி வரை தனி மரமாக சாய்ந்து விடாதீர்கள். தனிமை சொர்க்கம். ஆனால் அதை இன்னொருவர் வழங்கினால் அது நரகம்.

# ஒழுங்காய் இருந்தால் கடவுள் வரம் தேவையில்லை

முனிவர் ஒருவர் மரத்தடியில் அமர்ந்து தம் வேட்டியில் இருந்த கிழிசலைத் தைத்துக்கொண்டு இருந்தார்..!! அவர் ஒரு சிவபக்தர்... அப்போது சிவனும், பார்வதியும் வான்வெளியில் வலம் வந்து கொண்டிருந்தனர். மரத்தடியில் ஒளிப்பிழம்பாய் அமர்ந்திருந்த முனிவரைக் கண்டதும் உளம் நெகிழ்ந்த அம்மை, ஐயனைப் பார்த்து, "மரத்தடியில் பார்த்தீர்களா?" என்றாள்.

"பார்த்தேன்" என்றார் பரமன். "பார்த்த பிறகு சும்மா எப்படி போவது? ஏதேனும் வரம் கொடுத்துவிட்டுப் போகலாம், வாருங்கள்" என்றாள் அம்மை. "அட, அவன் அந்த நிலையெல்லாம் கடந்தவன். இப்போது அவனிடம் செல்வது வீண்வேலை. வேண்டாம் வா! நம் வழியே போகலாம்..." ஆனால் பார்வதி விடவில்லை... ஐயனை வற்புறுத்தி மரத்தடிக்கு அழைத்து வந்துவிட்டாள்..!!

"வணக்கம் முனிவரே!" என வணங்கினர் அம்மையும் அப்பனும். முனிவர் நிமிர்ந்து பார்த்தார். "அடடே! எம்பெருமானும் பெருமாட்டியுமா! வரணும் வரணும்..." என்று வரவேற்றார் முனிவர். தாகத்திற்கு மோர் கொடுத்து உபசரித்தார்... அவ்வளவுதான். மீண்டும் கிழிசலைத் தைக்கத் தொடங்கிவிட்டார். சற்றுநேரம் பொறுமையாகக் காத்திருந்துவிட்டு, "சரி, நாங்கள் விடை பெறுகிறோம்" என்றனர் அம்மையும் அப்பனும்... "மகிழ்ச்சியாய்ப் போய் வாருங்கள், வணக்கம்" என்று சொல்லிவிட்டு மீண்டும் கிழிசலைத் தைக்க முனைந்தார் முனிவர்...

அம்மை குறிப்புக் காட்ட, அப்பன் பணிவாய்க் கேட்டார்..., "முனிவரே! நாங்கள் ஒருவருக்குக் காட்சி கொடுத்துவிட்டால் வரம் கொடுக்காமல் போவதில்லை. எனவே தாங்கள் ஏதாவது வரம் கேளுங்கள். கொடுக்கிறோம்" என்றார்.

முனிவர் சிரித்தார். "வரமா! உங்கள் தரிசனமே எனக்குப் போதும். வரம் எதுவும் வேண்டாம். உங்கள் வழியைத் தொடருங்கள்" என்று சொல்லிவிட்டுப் பணியில் ஆழ்ந்தார்.

அப்பனும் அம்மையும் விடவில்லை. "ஏதாவது வரம் கொடுக்காமல் செல்லமாட்டோம்" என்று பிடிவாதமாய் நின்றனர்.

முனிவர் வேறு வழியின்றி ஒரு வரம் கேட்டார். "நான் தைக்கும்போது இந்த ஊசிக்குப் பின்னாலேயே நூல் போகவேண்டும்; அது போதும்" என்றார். இதைக் கேட்ட அம்மையும் அப்பனும் திகைத்தனர்.

'ஏற்கனவே ஊசிக்குப் பின்னால்தான் நூல் போகிறதே. இதற்கு நாங்கள் ஏன் வரம் தரவேண்டும்?" என்று அம்மை பணிவாய்க் கேட்டார்.

"அதைத்தான் நானும் கேட்கிறேன். நான் ஒழுங்கு தவறாமல் நடந்துகொண்டு வந்தால் வரவேண்டிய பலன் நியதிப்படி தானாகப் பின்னால் வருமே. இடையில் நீங்கள் எதற்கு எனக்கு வரம் தரவேண்டும்?" என்று கேட்டார் முனிவர்..!! முனிவரின் விளக்கத்தைக் கேட்ட அம்மையும், அப்பனும் சிரித்துவிட்டு, மகிழ்ச்சியாய் சென்றனர்.

"இருள்நீங்க இன்பம் பயக்கும் மருள்நீங்கி மாசறு காட்சி யவர்க்கு.-----வள்ளுவர்"

தூய்மையான இறை நம்பிக்கை கொண்டவர்களுக்கு...."நாம் சரியாக நடந்துகொண்டால் நமக்குரிய விளைவும் சரியாக இருக்கும் என்ற மனத்தெளிவு பிறக்கிறது.

## இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே....

ஒரு தாய் ஒட்டகம் தன்னுடைய குட்டி ஒட்டகத்தை கொஞ்சிக் கொண்டிருந்தது. அந்தக் குட்டி ஒட்டகம் தன்னுடைய தாயிடத்தில் சொன்னது "அம்மா இந்த கடவுள் எமக்கு அநீதியைச் செய்துவிட்டார். எங்கள் கால்களைப் பாருங்கள் குச்சிபோல் மெல்லியதாக உள்ளது. கடவுள் ஏன் இப்படி நமக்கு படைத்தார்". அப்போது தாய் ஒட்டகம் சொன்னது "அறிவில்லாமல் பேசுகிறாய். இது கடவுள் நமக்கு கொடுத்த பரிசு. வேறு வகையான கால் இருந்தால் அது மணலில் புதைந்து விடும். பாலைவனத்தில் நாம் கால் புதையாமல் நடக்க கடவுள் கொடுத்த பரிசு". மீண்டும் அந்த குட்டி சொன்னது "எங்கள் கண்களைப் பார் இமைகள் ஏன் இப்படி நீண்டு அலங்கோலமாய் இருக்கிறது. மற்ற விலங்குகளின் கண்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன கடவுள் நம்மை வஞ்சித்து விட்டார்." என்றது. அதற்கு தாய் ஒட்டகம் "அட முட்டாளே பாலைவனத்தில் மணல் புயல் வீசும், கண்ணை மூடிவிட்டு அப்படி நீளமான இமையால் அசைத்துவிட்டால் எல்லா மணலும் வீசப்பட்டுவிடும். எனவே அது கடவுள் எமக்கு அளித்துள்ள (தொடர்ச்சி 6ம் பக்கம்)

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பரிசு மறந்துவிடாதே'' என்றது. எங்கள் பற்களைப் பார் எவ்வளவு பட்டை பட்டையாக, சொண்டைப் பார் அம்மா இவ்வளவு தடிப்பாக அலங்கோலமாக இருக்கிறது ஏன் கடவுள் எமக்கு இப்படி கொடுத்தார் என்றது குட்டி ஒட்டகம். அதற்கு தாய் ''கண்ணே பாலை வனத்தில் கள்ளிச் செடிதான் முளைக்கும். அதைக் கடிப்பதற்கான பற்கள், கள்ளியிலுள்ள முட்களால் காயப்படாதிருக்க தடித்த பலமான உதடுகள். கடவுள் தந்த ஒப்பற்ற பரிசல்லவா அவை இது உனக்கு புரியவில்லையா?

எல்லாம் சரி முதுகிலை என்ன ஒரு மூட்டை மாதிரி என்று கேட்டது குட்டி. கண்ணே பாலைவனத்தில் ஒரு வாரம் தண்ணீர் கிடைக்கவில்லை என்றாலும் ஒக்சிஜின் எங்கள் உடலில் ஏற்றமடைந்து மீண்டும் நமக்குள்ளே சுழற்சியடைவதற்காக நீருக்காக கொடுக்கப் பட்டது அந்த திமில். அது கடவுள் நமக்கு கொடுத்திருக்கும் ஒப்பற்ற பரிசு. அப்படியானால் நாம் ஏன் மிருகக்காட்சி சாலையில் இருக்கிறோம்? என்று கேட்டது குட்டி ஒட்டகம்.

நன்றாக சிந்தியுங்கள், பாலைவனத்தில் வசிப்பதற்காக பரிசாக எதுவெல்லாம் தரப்பட்டதோ அதுவெல்லாம் மிருகக் காட்சி சாலையில் இருக்கிறபோது தண்டனைகள். பாலைவனத்தில் இருப்பதற்காக எவையெல்லாம் வரங்களாக தரப்பட்டதோ அவையெல்லாம் சம வெளியில் வாழுகிற போது வரங்கள் சாபங்களாக மாறிவிடுகின்றன. நீ இருக்கவேண்டிய இடத்தில் இருந்தால் சாபங்களை வரங்களாக்கி விடலாம், இருக்கக் கூடாத இடத்தில் இருந்தால் வரங்கள் சாபங்களாகி விடும். எனவே இருக்க வேண்டிய இடத்தில் இரு.

-------சுகி சிவம்

## மகிழ்ச்சி !

ஒரு தொழிலதிபர் குருவிடம் போய் சொல்கிறார். "குருவே என் வாழ்க்கையிலே இனிமேல் எதுவுமே கிடையாது. எல்லாம் முடிந்து விட்டது. எதுவுமே சரியில்லை. மனைவி சரியில்லை. பிள்ளைகள் என்னை மதிக்கவில்லை. தொழிலில் தோல்வி. தெருவிலை போனாலும் எவனும் எனக்கு மரியாதை கொடுக்கிறதில்லை. எல்லாம் முடிஞ்சு போச்சு. நான் எப்படி வாழ்வது குருவே! என்றான். குரு சொன்னார் எதுக்கும் கவலைப்படாதே நான் அதுக்கு மருந்து தருகிறேன் என்று சொல்லி ஒரு குவளையில் தண்ணீரை விட்டு அதில் நாலு ஸ்பூன் உப்பையும் போட்டு இதை குடி என்று அவனிடம் கொடுத்தார். அவனால் குடிக்க முடியவில்லை. அவனுக்கு குமட்டிக் கொண்டு வந்தது. இவ்வளவு உப்பைப் போட்டுத் தந்தால் எப்படி குடிக்கிறது என்றான் அவன். சரி அப்படியென்றால் இப்படி வா என்று அவனை ஒரு குளத்தடிக்கு கூட்டிச் சென்றார். அங்கே அதே நாலு ஸ்பூன் உப்பை குளத்தில் போட்டார். இப்ப குளத்து தண்ணீரை குடி என்றார் குரு. அவனும் குடித்தான். இது எப்படி இருக்கு? என கேட்டார் குரு. "நன்றாக இருக்கிறது. இனிக்கிறது என்றார் தொழிலதிபர். அது எப்படி இனிக்கும் அதே நாலு ஸ்பூன் உப்பை தானே குளத்திலும் போட்டேன் என்றார் குரு. நீங்கள் சின்ன குவளையில் நான்கு ஸ்பூன உப்பை போடுவதும் குளத்தில் அதை போடுவதும் ஒன்றாகுமா? என்றார் அவர்.

உடன் குரு கேட்டார் "உன் மனதை ஏன் குவளை போல் வைத்திருக்கிறாய் குளம் போல் வைத்திரு.

வருகின்ற கவலை என்கின்ற உப்பு கரைந்துவிட்டாலும் இனிமை மாறாத குளமாக உன் மனம் இருந்தால் உனக்கு குமட்டல் எப்படி வரும். அப்பிடித்தான் இருக்கும். வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும் வாசல் தோறும் வேதனை இருக்கும் வந்த துன்பம் எதுவென்றாலும் வாடி நின்றால் ஓடுவதில்லை. இது கண்ணதாசன் பாட்டு. இது சினிமா பாட்டில்லை மந்திரம்.

மகா பாரதத்திலை எக்சன் கேள்வி கேட்பதாகவும் தருமன் பதில் சொல்வதாகவும் ஒரு பகுதி இருக்கு. நாம் ஒவ்வொருவரும் படிக்க வேண்ய பகுதி அது. அதில் எக்சன் கேட்கிறான் "புல்லை விட வேகமாக வளரக்கூடியது எது? தருமன் சொல்லுகிறான் கவலை. காற்றைவிட வேகமானது எது? மனம். வீட்டிலே இருப்பவனுக்கு துணை யார்? அவனுடைய மனைவி. வெளியிலே போகிறவனுக்கு துணை யார்? அவன் கற்ற கல்வி. இப்படியே கேள்வி பதில் போய்க் கொண்டே இருக்கும்.

கடைசியில் எக்சன் கேட்கிறான், மகிழ்ச்சியானவன் யார்? சத்தியமாக இது மகா பாரதத்திலை இருக்கு, நான் சொல்வதல்ல. மூன்று பேர் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். ஒன்று கடன் இல்லாதவன். இரண்டவது பிழைப்புக்காக வெளிநாடு போகாதவன். மூன்றாவது ஒரு வேளை சாப்பாடாவது தன் வீட்டில் சோறும் கீரையும் தின்கிறவன். இந்த மூன்று பேரும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று நாலாயிரம் ஆண்டுகட்கு முன் எழுதப்பட்ட மகா பாரதத்தில் இருக்கிறது.

நாலாயிரம் வருஷங்களாக இந்த தேசத்திலே இருக்கின்ற சிந்தனை என்னவென்று தெரியுமா? கடனில்லாதவன் மகிழ்ச்சியாக இருக்கிறான். தன்னுடைய ஊரைவிட்டு வெளியூருக்கு போகின்ற அந்த தொல்லை இல்லாதவன் மகிழ்ச்சியாக இருக்கிறான். சிலர் சொல்வார்கள் வெளிநாட்டிலை இருக்கிறவனெல்லாம் எப்படி சகல வளத்துடனும் இருக்கிறார்கள்! என்று. ஆனால் அப்படி ஒன்றுமில்லை அவங்களும் எங்கைளைப் போல் தான் இருக்கிறார்கள். இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி எங்கெங்கோ அலைகிறாய் ஞானத் தங்கமே எனறு கண்ணதாசன் எழுதலையா?

**மகிழ்ச்சி என்பது மனம் குளம் போல் இருந்தால் கிடைக்கும். அவ்வளவு தான்.**

--------பட்டி மன்ற பேச்சாளர் பாரதி பாஸ்கர்